# பொதுக்காலத்தின் இருபத்தாறாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**ஆமோஸ் 6:1,4-7, 1 திமொத்தேயு 6:11-16, லூக்கா 16:19-31**

## திருப்பலி முன்னுரை:

மேன்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தாறாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நம்மிடம் அதிகமாக இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. பிறர்நலம் நாடுவதால் கிடைக்கும் பேரின்பத்தையும், தன்னலத்தால் வரும் வேதனையையும் குறித்து இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் எடுத்துரைக்கிறார். வீட்டு வாயில் அருகே இருந்த ஏழை இலாசரை கண்டுகொள்ளாத செல்வர் பாதாளத்துக்கு செல்கிறார். தனக்கு கிடைத்த உணவுத் துண்டுகளைக் கொண்டு தெருநாய்களின் பசியாற்றிய இலாசர் ஆபிரகாமின் மடியில் அமர்ந்திருக்கிறார். நம்மிடம் இருக்கின்ற செல்வத்தை நமது மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி, பிறரை மகிழ்விக்கவும் பயன்படுத்த வரம் கேட்டு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. இரக்கம் நிறைந்த இறைவா,**

உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இரக்கம் சிந்தனை உள்ளவர்களாய் வாழ்ந்து, இறைமக்களின் தேவைகளை நிறைவு செய்ய உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. அன்பு நிறைந்த இறைவா,**

உலக நாடுகளை ஆட்சி செய்யும் தலைவர்கள், அனைத்து மக்கள் மீதும் அன்பு கொண்டவர்களாக வாழ்ந்து, மிகுதியாக வைத்திருப்பவர்களிடம் பெற்று தேவையில் இருப்பவர்களுக்கு பகிர்ந்தளிக்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. கனிவு நிறைந்த இறைவா,**

எம் நாட்டின் தலைவர்கள் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோர் மீது கனிவு கொள்பவர்களாக வாழ்ந்து, ஏற்றத் தாழ்வுகளையும், மனித நேயத்துக்கு எதிரான செயல்களையும் சமூகத்தில் இருந்து களைய உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. பொறுமை நிறைந்த இறைவா,**

பசியையும் நோயையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு துன்பத்தில் வாழும் மனிதர்கள் மீது கருணை காட்டி, அவர்களுக்குத் தேவையான உணவையும் உடல் நலத்தையும் வழங்கி உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

உமது அன்பையும், இரக்கத்தையும், செல்வத்தையும், வளங்களையும் பெற்று மகிழும் நாங்கள் அனைவரும் அவைகளை மற்றவர்களோடு பகிர்ந்து உமது சாட்சிகளாய் வாழ எமக்கு அருள் தந்து எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.